வடமராட்சிக்கான
உதயன்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 83

வெள்ளிக்கிழமை 17 பெப்ரவரி 2023 | மாசி 05 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12

# கிடைக்கின்ற அதிகாரங்களை முதலில் பெற்றுக்கொள்ளுங்கள்

## ஜெய்சங்கரின் வழியில் ரணிலும் தெரிவிப்பு



கொழும்பு, பெப்ரவரி 17

சமஷ்டி என்று முட்டி மோதிக்கொண்டிருக்காமல் முதலில் கிடைக்கின்ற அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று தமிழ்த் தலைவர்களுக்கு ஆலோசனை கூறியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. »11

# உண்மை நல்லிணக்க ஆணைக்குழு எவ்வாறாக அமைக்கப்படவேண்டும்?

## இலங்கை மனித உரிமைகள் ஆணையாளர் யாழ்ப்பாணத்தில் இன்று ஆராய்கின்றார்

யாழ்ப்பாணம், பெப். 17
உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கப்படுமாக இருந்தால் அது எவ்வாறான முறையில் உருவாக்கப்பட வேண்டுமென்ற ஆலோசனைகளை இலங்கை மனித உரிமை »11

# ஆணைக்குழு அழைப்பு; நிதியமைச்சு உதாசீனம்

கொழும்பு, பெப். 17
உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியை விடுவிப்பது தொடர்பில் கலந்துரையாட ஆணைக்குழுவுக்கு வருகை தருமாறு திறைசேரியின் செயலர், »09

இந்திய மீனவர்களை அனுமதித்து

# தாயக மீனவர்களுக்கு டக்ளஸ் துரோகம்!

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப். 17
இந்திய இழுவை மடிப்படகுகளை இலங்கை கடற்பரப்பினுள் அனுமதிப்பதன் ஊடாக வடக்கு மற்றும் கிழக்கு வாழ் தமிழ் மீனவர்களுக்கு »11

# அமைச்சர் டக்ளஸ் 'குத்துக்கரணம்'

யாழ்ப்பாணம், பெப். 17
இந்தியக் கடற்றொழிலாளர்கள்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெளியான செய்தி தொடர்பாக அவதானம் »11

# இந்தியாவிலிருந்து வடக்குக்கு படையெடுக்கும் தலைவர்கள்

## இந்து மக்கள் கட்சியின் தலைவரும் வந்தடைந்தார்

யாழ்ப்பாணம், பெப். 17
இந்தியாவின் இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத் தலைமையிலான குழுவினர் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு நேற்று வருகை தந்துள்ளனர். »11

மாநகரசபையில்

# பழமொழியால் வந்த வினை!

யாழ்., பெப். 17
சபையில் அநாகரிகமான சொற்பிரயோகத்தை மேற்கொண்ட மாநகரசபை உறுப்பினர் பா. பத்மமுரளி சபையி »11

# மனைவியைத் திட்டினார்; 'மண்டையில்' போட்டேன்!

## அத்தியடி கொலைச் சந்தேகநபர் பொலிஸ் விசாரணையில் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், பெப். 17
நான் வேலை செய்ய மறுத்தபோது வீட்டுக் காரப்பெண்மணி என் மனைவியைத் தரக் குறைவாக ஏசினார். அதனால் அவரைத் தலை »11

# பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தலைவரின் அலுவலகம் 'சீல்'

கொழும்பு, பெப். 17
நீதிமன்ற உத்தரவுக்கமைய இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவர் ஜனக ரத்நாயக்கவின் அலுவலகம் பொலிஸாரால் 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.
கொள்ளுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த சிலர் குறித்த அலுவலகத்தில் இருக்கும் முக்கியமான ஆவணங்களை அழிக்கத் திட்டமிடுவதாக கொள்ளுப்பிட்டி பொலிஸாருக்கு »11

'யாழ்ப்பாணப் பண்பாட்டு நடுவம்'

# கலாசார நிலையத்துக்கு புதிய பெயர் பரிந்துரை

## மாநகரசபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப். 17
இந்திய அரசாங்கத்தின் நிதி நன்கொடையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாண கலாசார நிலையத்தை யாழ்ப்பாண மாநகரசபைக்கு »09

மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராக

# நாடளாவிய ரீதியில் 'ஹர்த்தால்'?



கொழும்பு, பெப். 17
மின்கட்டண அதிகரிப்புக்கு எதிரான போராட்டத்தில் 74 இலட்சம் மின் பாவனையாளர்களும் ஒன்றிணையவேண்டும். நாடளாவிய ரீதியில் ஹர்த்தால் நடவடிக்கையில் ஈடுபட அவதானம் செலுத்தியுள்ளோம். மின்கட்டண அதிகரிப்பு நாட்டு மக்களுக்கு மரண தாக்குதலாக அமையும் -இவ்வாறு துறைமுகம், [illegible] »11

சேவைகள், பொருள்கள் கட்டணங்கள்

# 'கிடுகிடு' உயர்வு!

## மின்கட்டண அதிகரிப்பின் எதிரொலி

கொழும்பு, பெப். 17
மின்கட்டணம் மிகப்பெரியளவில் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து பல்வேறு பொருள்கள், சேவைகளினதும் கட்டணங்களும் உயர்த்தப்பட்டுள்ளன. »09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் விடயத்தில் உடன் தலையிடுக!

## ஐ.நா.வை கோரியது எதிர்க்கட்சி

கொழும்பு, பெப். 17
இலங்கையிலுள்ள மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உள்ளூராட்சிமன்றத் தேர்தல் விடயத்தில் தலையிடுமாறு ஐக்கிய நாடுகள் சபையிடம் ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள, அரசமைப்புக்கு முரணான முயற்சிகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கையிலுள்ள அலுவலகத்தில் ஐக்கிய மக்கள் சக்தி முறைப்பாடு செய்துள்ளது. இந்த முறைப்பாட்டிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்ததாவது:-

இலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல்கள் மார்ச் 20ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட வேண்டும். அதற்கு முன்னர் புதிய சபைகள் நிறுவப்படவேண்டும். உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனு தாக்கல் செய்ய தேர்தல்கள் ஆணைக்குழுவால் அழைப்பு விடுக்கப்பட்டதோடு, மார்ச் 9ஆம் திகதி தேர்தல் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டது. வேட்பாளர்களின் தேர்தல் பரப்புரைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் தேர்தலில் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு இலங்கை மக்கள் மத்தியில் உற்சாகம் காணப்படுகிறது.

தேர்தல் தொடர்பான பொதுக்கருத்துக் கணிப்புக்கள் அரசாங்கத்துக்கு மிகவும் பாதகமானவை என்பதை உணர்ந்து, நிதியமைச்சராக இருக்கும் ஜனாதிபதி சில சுற்றறிக்கைகளை வெளியிட்டு, அமைச்சரவை சில தீர்மானங்களை எடுத்துள்ளது. இலங்கை மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையிலும், அரசமைப்பின் புனிதமான ஏற்பாடுகளை அப்பட்டமாக மீறும் வகையிலும் மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் வகையில் நிறைவேற்று அதிகார சபை அரசமைப்புக்கு முரணாகச் செயற்படுகின்றது.

எனவே, இலங்கை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க இந்த விடயத்தில் தலையிடுமாறு ஐ.நா. அலுவலகத்தை கேட்டுக் கொள்கின்றோம் - என்றார். (ம)

## மின்சாரக் கட்டண அதிகரிப்பால் பாதிப்படைவோருக்கு நிவாரணம்

### ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, பெப். 17
உயர்த்தப்பட்டுள்ள மின்கட்டணத் திருத்தத்தால் பாதிக்கப்படும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பல்வேறு சர்ச்சைகளுக்குப் பின்னர் நேற்று முன்தினம் முதல் மின்கட்டணத்தைச் சுமார் 65 வீதமாக உயர்த்துவதற்கு பொதுப்பயன்பாடு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அந்தவகையில் அதிகரிக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டணத்தால் பொருளாதாரம் நலிவடைந்த மக்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட வேண்டும்.

மின்பாவனையாளர்களுக்கு தொடர்ச்சியாக மின்சாரம் வழங்குவதுடன் குறைந்த வருமான மீட்டும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் அரச கல்வி நிறுவனங்களுக்கு சூரிய மின்தகடுகளை வழங்கல் ஆகியவற்றில் கவனம் செலுத்தவேண்டும் என ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

## பல உணவுப் பொருள்கள் சதொசவில் விலை குறைப்பு

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் பலவற்றின் விலைகள் நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளன என லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய ஒரு கிலோ பெரிய வெங்காயம் 10 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 149 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்படும் சம்பா அரிசி ஒரு கிலோ 7 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 198 ரூபாவாகவும், ஒரு கிலோ சிவப்புப் பருப்பு 7 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 358 ரூபாவாகவும், ஒரு கிலோ உள்ளூர் சிவப்பு பச்சரிசி 5 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 164 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ வெள்ளைப் பச்சரிசி 5 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 179 ரூபாவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மருந்துத் தட்டுப்பாடு எதிரொலி

# மருத்துவமனைகளுக்கு நன்கொடையளியுங்கள்

### மருத்துவர்கள் கூட்டுக் கோரிக்கை

கொழும்பு, பெப். 17
மஹரகம புற்றுநோய் மருத்துவமனை உட்பட நாட்டின் பல மருத்துவமனைகளில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் நன்கொடையாளர்களிடமிருந்து உதவிகள் எதிர்பார்க்கப்படுகின்றன என மருத்துவர்கள் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மருத்துவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

புற்றுநோயாளர்களுக்கான 43 மருந்துகள் உட்பட 140 மருந்துகளுக்கான தட்டுப்பாட்டை நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பு எதிர்கொள்கின்றது. மருந்துத் தட்டுப்பாடு சுகாதார சேவைகளை முடக்கியுள்ளது. இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். தட்டுப்பாடாக உள்ள மருந்துகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளபோதிலும் கொடுப்பனவுகள் தொடர்பில் பிரச்சினைகள் உள்ளன என சுகாதார அமைச்சால் தெரிவிக்கப்படுகிறது. ஆபத்தில் சிக்குண்டுள்ள மக்களை காப்பாற்ற சுகாதார அமைச்சு தவறுகின்றது. நோயாளர்களுக்கான சிகிச்சை தாமதமானால் மருத்துவர்களால் எதனையும் செய்யமுடியாது. எனவே மருத்துவமனைக்கு நன்கொடைகளை வழங்க ஆர்வமுள்ளவர்கள் விரைந்து செயற்படவேண்டும் - என்றனர். (ச-இ)

## சீனாவுக்கு புறப்பட்டார் கோத்தாபய

கொழும்பு, பெப். 17
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும் அவரது மனைவி அயோமா ராஜபக்சவும் சீனாவுக்குப் புறப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து நேற்று வியாழக்கிழமை காலை மலேசியாவுக்குச் செல்லும் அவர்கள் அங்கிருந்து சீனாவுக்குச் செல்லவுள்ளனர் என எதிர்பார்க்கப்படுவதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-14-இ)

## மின்கட்டணத் திருத்தத்தால் இனி தடையற்ற மின்சாரம்!

### அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

மின் கட்டண அதிகரிப்பையடுத்து நாடளாவிய ரீதியில் நேற்று வியாழக்கிழமை முதல் தொடர்ச்சியாக மின்சாரத்தை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களுக்குத் தொடர்ந்து மின்சாரத்தை வழங்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதையடுத்து அதை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இந்த நிலையில் மின்சாரக் கட்டணத் திருத்தத்தின் அங்கீகாரத்துடன், நிலக்கரி கொள்வனவு செய்யப்படவுள்ளது. இதற்காக 22 பில்லியன் ரூபா மேலதிக கடனாக வழங்குவதற்கு இலங்கை வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.
- என்றார். (ம-14-இ)

## இலங்கையில் வருடாந்தம் சராசரியாக 900 குழந்தைகளுக்குப் புற்றுநோய்

இலங்கையில் வருடாந்தம் சுமார் 900 குழந்தைகள் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர் என புற்றுநோய் விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் சுராஜ் பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் வருடாந்தம் சுமார் 900 குழந்தைகள் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் இரத்தப் புற்றுநோய் அல்லது லியூகேமியா நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அறிகுறிகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சையை வழங்கினால் குணப்படுத்த முடியும் - என்றார்.

நாட்டின் சுகாதாரத்துறை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மருத்துவப் பெருநெருக்கடியை அண்மைக்காலமாக எதிர்கொண்டுள்ளது.

குறிப்பாக புற்றுநோய்க்கான மருந்துகளுக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதனால் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள பலர் உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நிதி வழங்கினால்

# 25 நாள்களில் வாக்குச்சீட்டுகள்

## அரச அச்சகம் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 17

நிதி வழங்கினால் 20 அல்லது 25 நாள்களுக்குள் வாக்குச்சீட்டுகள் அச்சிடும் அனைத்துப் பணிகளையும் நிறைவு செய்யமுடியும் என்று அரச அச்சகத் திணைக் களத் தலைவர் கங்கானி லியககே தெரிவித்தார்.

அரச அச்சகத் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சித் தேர்தல் விவகாரத்தில் தேசிய தேர்தல் கள் ஆணைக்குழு, திறைசேரி ஆகிய இரு தரப்பாலும் நான் நெருக்கடிக்குள்ளாகியுள்ளேன். வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகளுக்கு நிதி வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்த கடிதம் ஊடகங்க ளுக்கு பகிரங்கப்படுத்தப்பட்டு, தற்போது ஒரு தரப்பால் அது அரசியல் பிரசாரமாக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்புத் தொடர் பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியான தினத்தில் இருந்து தேர்தல் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளோம். உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக் கான வாக்குச்சீட்டு அச்சிடல் உட்பட ஏனைய கடமை களுக்கான பணிகளை முன்னெடுக்க 400 மில்லி யன் ரூபா தேவைப்படும் என மதிப்பிடப்பட்டது.

தபால் மூல வாக்கெடுப்புக்கான வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவதற்கும், மார்ச் மாதம் 9ஆம் திகதி வாக்கெ டுப்பை நடத்துவதற்கும் தேவையான வாக்குச்சீட்டு அட்டைகளை அச்சிடுவதற்கு 200 மில்லியன் ரூபா முற்பணத்தைக் கோரினோம். இருப்பினும் நிதி விடு விப்பு நெருக்கடியால் தேர்தல்கள் ஆணைக்குழு 200 மில்லியன் ரூபா முற்பணத்தை அரச அச்சகத் திணைக்களத்துக்கு வழங்கவில்லை.

வாக்கெடுப்புப் பணிகளுக்கான ஆரம்பகட்ட நடவடிக் கைகளை மேற்கொள்ள திறைசேரியிடம் நான் 40 மில்லியன் ரூபாவை பெற்றுக்கொண்டேன். அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள நிதியில்லை. திறைசேரி, தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித் தும் பதிலில்லை. எவரும் பொறுப்பேற்காத நிலையில் எவ்வாறு எம்மால் தேர்தல் பணிகளை முன்னெடுக்க முடியும். அரசாங்கம் வெளியிடும் சுற்றறிக்கை மற் றும் நிர்வாகக் கோவை ஆகியவற்றுக்கு அமையவே எம்மால் செயற்படமுடியும். கடனுக்குப் பணிகளை செய்யக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ள பின்னணி யில் வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளை எவ்வாறு முன் னெடுப்பது எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிய கடிதத்துக்கு எந்தவித பதிலும் இதுவரை கிடைக்கவில்லை.

தபால் மூல வாக்கெடுப்பு மற்றும் மார்ச் 9ஆம் திகதிய வாக்கெடுப்பு ஆகியவற்றுக்குத் தேவையான வாக்குச் சீட்டுகளை அச்சிட வேண்டுமாயின் துரிதமாக நிதி ஒதுக்கவேண்டும். நிதி வழங்கினால் 20 அல்லது 25 நாள்களுக்குள் அனைத்துப் பணிகளையும் நிறைவு செய்யமுடியும் - என்றார். (ம-14-இ)

# தேர்தல் பிற்போடப்படின் மக்கள் போர் வெடிக்கும்!

## சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை



கொழும்பு, பெப். 17

பல்வேறு உபாயங்களை மேற்கொண்டு உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றது. இது மக்கள் போராட்டத்துக்கு கை அசைப்பது போன்றதாகும் என 43ஆவது படையணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந் திப்பில் கருத்துத் தெரிவிக்கை யிலேயே சம்பிக்க ரணவக்க இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தலைப் பிற்போடுவதற்கு 21 தடவைகள் முயற்சித்த அரசாங் கம், 22ஆவது தடவையில் நிதி அமைச்சின் செயலாளரையும் அச்சக பிரதானியையும் பயன்ப டுத்திக்கொண்டு பணம் வழங்கா மல் தேர்தலைப் பிற்போவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை மிகவும் பயங்கரமான செயற்பாட் டுக்கு வழியமைக்கும். தேர்தலை பிற்போடுவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகள் மக்களின் இறை யாண்மைக்கு விடுக்கப்படும் மரண அடியாகும்.

பயங்கரவாத அச்சுறுத்தல் காலத்திலும், சுனாமியால் பாதிக் கப்பட்டிருந்த வேளையிலும், கொரோனா தொற்று நிலைமை யிலும் இந்த நாட்டில் தேர்தல் இடம்பெற்றது.

நிறைவேற்று அதிகாரியின் தீர்மா னத்தின் பிரகாரம் தேர்தல் நடத் தாமல் இருந்த சந்தர்ப்பங்களில் நாடு, முன்னெப்போதும் இல்லாத வன்முறைக்குப் பயணித்துள்ளது. நாட்டின் தற்போதைய நிலைமை யிலும் பணம் இல்லையென்றோ அல்லது வேறு காரணங்களைக் காட்டியோ தேர்தலைப் பிற்போட் டால் நிச்சயமாக மக்கள் போராட் டம் ஒன்று ஏற்படும்.

இது கோத்தாபயவை விரட்டிய தைப் போன்ற போராட்டம் மீண் டும் ஏற்படுவதற்கு வழிகளை ஏற்படுத்தும் - என்றார். (ம)

# எதிர்வரும் 24இல் தேர்தல் பரப்புரை

## பெரமுன தீர்மானம்

கொழும்பு, பெப். 17

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டத்தை எதிர்வரும் 24ஆம் திகதி அநுராதபுரம் நகரில் நடத்த பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் களுக்கும், பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த செவ் வாய்க்கிழமை நெலும் மாவத்தையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்றது. அதன்போதே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்போது தற்போதைய அரசியல் நிலைவரம், கட்சி மீள்மறுசீரமைப்புத் தொடர்பில் அவதானம் செலுத்தப் பட்டது. நிலையான அமைச்சரவையை அமைத்தல், பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கல் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு ஆளும் தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர். இது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள் ளதாக பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார். அத்துடன் உள்ளூராட்சித் தேர்தலுக்குத் தயாராகுமாறும் பஸில் ராஜபக்ச அறிவுறுத்தியுள்ளார். (ம-14-இ)

# தேர்தலுக்கு இடையூறுகள்: தண்டனைக்குரிய குற்றமே!

## பீரிஸ் அறிவுறுத்து

கொழும்பு, பெப். 17

தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப் பது மூன்று வருடகால சிறைத் தண்டனைக்குரிய குற்றம் என்பதை அரச அதிகாரிகள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் பேராசிரியருமான ஜி.எல்.பீரிஸ் தெரி வித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திடமிருந்து நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது பெரும் போராட்டமாக உள்ளது. இந்த அரசாங்கத்துக்கு மக்களாணை கிடையாது. பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண வேண்டுமாயின் மக்களாணையுடன் அரசாங்கம் ஒன்று தோற்றம் பெறவேண்டும்.

நாட்டு மக்கள் தமக்கான அரசாங்கத்தைத் தெரிவு செய்வதற்கு ஜனாதிபதி இடமளிக்கவேண்டும். தடை யாக இருக்கக் கூடாது. ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தலில் படுதோல்வியடைவது உறுதி. அரசியல் பின்னடைவைத் தவிர்த்துக் கொள்வதற்காக ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளூராட்சிமன்றத் தேர்தலைப் பிற்போட முறையற்ற வகையில் செயற் படுகிறார்.

தேர்தல் ஒன்றை நடத்தும்போது அரச நிறுவனங்க ளுக்கு ஒரே கட்டமாக நிதி ஒதுக்கப்படுவதில்லை. கட் டம் கட்டமாகவே நிதி ஒதுக்கப்படும். வாக்குச்சீட்டு அச் சிடுவதற்குத் தேவையான 400 மில்லியன் ரூபாவை வழங்குமாறு அரச அச்சகத் திணைக்களம் தேர்தல் கள் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தியுள்ளது.

நிதி நெருக்கடியால் வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளை அரச அச்சகத் திணைக்களம் இடை நிறுத்தியுள்ளது. நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்ன ணியில் 75ஆவது சுதந்திர தினம் பல கோடி ரூபா செலவில் கொண்டாடப்பட்டது. சுதந்திரதினத்துக்கு அரச அச்சக திணைக்களம் செலவுசெய்த நிதியை திறைசேரி முழுமையாக வழங்கியதா என்பதை அரச அச்சகத் திணைக்களத் தலைவர் கங்கானி லியககே குறிப்பிட வேண்டும் - என்றார். (ம)

# 12 ஆண்டுகள் ரணிலின் ஆட்சி: நாடு சுபீட்சம்பெற அதுவே வழி

## வஜிர அபேவர்த்தன புகழாரம்

கொழும்பு, பெப். 17

எதிர்வரும் 12 ஆண்டுகளுக்கு ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை ஆண்டால் இலங்கையானது ஆசி யாவிலும் உலகிலும் பலம்மிக்க நாடாக உயர்வடையும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசா ளரும், நாடாளுமன்ற உறுப்பினரு மான வஜிர அபேவர்த்தன புகழாரம் சூட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திறைசேரியில் 3 பில்லியன் டொலர் கையிருப்புடனேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்தார். நாட்டைக் கட்டியெழுப் புவதற்கான கூட்டு முயற்சியை மேற்கொண்டுள்ளார். தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி வருகிறோம். எமது எதிர்கால பொருளாதாரத் திட்டத்தை அடிப்படையாகக்கொண்டு விவா திக்கின்றோம். அதற்கமைய இந்த வருட இறுதிக்குள் பொருளாதாரம் உறுதியை அடையும் நிலை உரு வாகும். சில தவறான செயல்களால் உலகில் ஒதுக்கப்பட்ட நாடாக மாறி வருகிறோம். அந்த நிலையை மாற் றுவது எளிதல்ல. ஆனால் அதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்துவருகிறார் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அறுவடைக்கான கட்டணம் மாறுபட்ட விதத்தில் அறவீடு

## நெற்செய்கையாளர் விசனம்

**யாழ்ப்பாணம், பெப். 17**
**பெரும்போக அறுவடைப் பணிகளுக்கு அறுவடை இயந்திர உரிமையாளர்கள் மாறுபட்ட வகையில் இயந்திரக் கட்டணங்களை அறவிடுகின்றனர் என நெற்செய்கையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

இதுதொடர்பில் விவசாயிகள் மேலும் தெரிவித்ததாவது: .
யாழ். மாவட்டத்தில் காலபோகத்தின் பெரும்போக நெற்செய்கை அறுவடைப் பணிகள் தற்போது முழுவீச்சாக இடம்பெற்று வருகின்றன. இந்த அறுவடைப் பணிகளின்போது இயந்திர உரிமையாளர்கள் மாறுபட்ட விதத்தில் இடத்துக்கு இடம் கட்டணத்தை அறவிடுகின்றனர்.
பரப்புக்கு 800 ரூபா தொடக்கம் ஆயிரம் ரூபா வரை கட்டணம் அறவிடப்படுகிறது.
இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் விவசாய சம்மேளனங்கள் கவனத்திற்கொண்டு, நியாயமான கட்டண மொன்றை நிர்ணயித்து பொதுப்பொறிமுறையின் கீழ் சரியான ஒழுங்கமைப்புடன் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-17)



# தேர்தல் கண்காணிப்பு: வவுனியாவில் கருத்தமர்வு

வவுனியா, பெப். 17
உள்ளூராட்சித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடல் வவுனியா தவசிகுளம் பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.
தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவருமான மஹிந்த தேசப்பிரியவால் இளைஞர், யுவதிகளுக்கு இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது உள்ளூராட்சித் தேர்தலின் நடைமுறைகள், வேட்பாளர்களின் செயற்பாடுகள், தேர்தல் முறைகேடுகளை அவதானிக்கும் வழிமுறைகள், சமூக ஊடகங்கள் ஊடான தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள், அரச சொத்துக்களைப் பயன்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன. (ம-14.18)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 17
புத்தூர் நிலாவரை நவக்கிரிப் பகுதியில் கஞ்சாவுடன் ஒருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைதுசெய்யப்பட்டார் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பிரிவுக்குக் கிடைத்த தகவலையடுத்து காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பொலிஸாரால் இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டது. அத்துடன் கைது செய்யப்பட்டவரிடமிருந்து 255 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. கைதுசெய்யப்பட்டவர் சுன்னாகம் புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய நபர் எனத் தெரிவித்த காங்கேசன்துறைப் பொலிஸார், அவரை அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். (ம-14.23)

# காற்றின் வேகம் அதிகரிக்கலாம்!

யாழ்ப்பாணம், பெப். 17
நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வடக்கு-கிழக்குத் திசையிலிருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20-30 கிலோமீற்றர் வரை காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் உள்ளதாவது:
மன்னாரிலிருந்து புத்தளம் ஊடாக சிலாபம் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40- 45 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடும். அவ்வேளைகளில் கடல் கொந்தளிப்பாகக் காணப்படும். மீனவர்கள் மீன்பிடித்தொழிலில் அவதானமாக ஈடுபடவும். அதேவேளை நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் பிரதானமாக சீரான வானிலை நிலவும். - என்றுள்ளது. (ச-இ)

# இராணுவ வாகனம் மோதி ஒருவர் பரிதாபச் சாவு

கொழும்பு, பெப். 17
இராணுவ வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களை மோதித் தள்ளியதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இந்த விபத்து அலவத்துகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-9 வீதியில் வெலிகந்த சந்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. பல்லேகலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இராணுவத்துக்குச் சொந்தமான வாகனமொன்றே இவ்வாறு விபத்தை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.
விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் மாத்தளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். விபத்தை ஏற்படுத்தியமைக்காக இராணுவ வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**இடபம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். நிதானம் அவசியம்.

**மிதுனம்:** ஆதரவு உற்சாகம் தரும். திடீர் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பொறுப்புகளை மற்றவர்கள் பகிர்ந்து கொள்வார்கள்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். உடல் அசதி உண்டாகும். லாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**சிம்மம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பிரச்சினைகள் நீங்கும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். செலவு செய்யவேண்டி வரும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**விருச்சிகம் :** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். செலவு செய்ய வேண்டி வரும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் பெறவும் வாய்ப்பு உள்ளது.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணையின் உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவைப்படும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். [illegible] வீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். அலைச்சலும் சோர்வும் உண்டாகும்.

# மெய்வன்மை திறனாய்வு

யாழ்ப்பாணம், பெப்.17
யாழ்ப்பாணம் இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மை திறனாய்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல.14 சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.
பாடசாலை அதிபர் திருமதி சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரி ஓய்வுபெற்ற அதிபர் இ.ஓங்காரமூர்த்தி கலந்துகொள்ளவுள்ளார். (ச)

# புகையிலைச் செய்கையில் விவசாயிகள் பலர் ஆர்வம்

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் புகையிலைச் செய்கையில் விவசாயிகள் தற்போது ஆர்வம் காட்டி வருகின்றனர்.
வலிகாமம் பிரதேசத்தில் குப்பிழான், புன்னாலைக்கட்டுவன், ஏழாலை, கட்டுவன், மயிலங்காடு, ஈவினை, வயாவிளான், குரும்பசிட்டி, அச்செழு, புத்தூர், நவக்கிரி, ஊரெழு, உரும்பிராய், கோப்பாய், சுன்னாகம், கந்தரோடை, மருதனார்மடம், இணுவில், தெல்லிப்பழை, அளவெட்டி உள்ளிட்ட பல பகுதிகளிலும், தீவகம் மற்றும் வடமராட்சிப் பகுதிகளிலும் பல ஏக்கர் நிலப் பரப்பில் இந்த வருடம் புகையிலைச் செய்கை விவசாயிகளால் முன்னெடுத்துள்ளனர். (ம-14.66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தொடரும் துயர்கதை!

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் வடக்கில் இதர பகுதிகளிலும் அண்மைக்காலமாக மீன்பிடிபாடு சடுதியாக அதிகரித்திருக்கின்றது. பொதுவாகவே இந்தக் காலப் பகுதியில் மீன்களின் வரத்தும், மீன் பிடிபாடும் அதிகரிக்கும். இதனால், பெப்ரவரி – ஏப்ரல் வரையிலான காலத்தை மீனவர்கள் தமது பொருளாதாரத்தை மேம்படுத்துகின்ற – தக்கவைக்கின்ற காலமாகக் கொண்டிருப்பார்கள். ஆனால், ஈழத் தமிழ் மீனவர்களின் நிலையோ இன்னும் பரிதாபத்துக்குரியதாகவே இருக்கின்றது. இங்கே ஏமாற்றம் ஒன்றுதான் நிரந்தரமும் தொடர்கதையும்.

தமிழக மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி கடந்த இரு வாரங்களாக அதிகரித்திருக்கின்றது என்ற குற்றச்சாட்டு ஈழத் தமிழ் மீனவர்களால் அண்மைக்காலமாக மிகையாகவே முன்வைக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. மீன்பிடிபாடு அதிகரிக்க அதிகரிக்க, தமிழக மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியும் அதிகரிக்கும், இது தெரிந்ததே. இதுவொன்றும் இந்த வருடம் இடம்பெறும் சம்பவமல்ல. 2009ஆம் ஆண்டிலிருந்து இதுதான் வடக்குக் கடற்பரப்பின் காட்சிகளும் கோலங்களும். ஆனால், இதற்கொரு நிரந்தரத் தீர்வை இன்னமும் அரசாங்கம் கண்டதாக இல்லை. 'இந்தியத் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்துகின்றோம்' என்று தெரிவிக்கின்றார்களே தவிர இந்த விடயத்தில் இன்னும் சிறு முன்னேற்றம்கூட இல்லை. நாட்டின் அதியுச்ச அதிகாரத்தைக் கொண்ட நிறைவேற்று ஜனாதிபதி கூட ஒரு காத்திரமான தீர்வை தமிழ் மீனவர்களுக்கு வழங்கத் திராணி அற்றவராகத்தான் இருக்கின்றார் என்பதுதான் கசப்பான உண்மை.


இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி ஒருபுறம் இருக்கட்டும். மீன்பிடிக் காலத்தில் வடக்குக் கடற்பரப்பில் பிடிபடுகின்ற மீன்களுக்குச் சரியானதொரு சந்தை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதா? என்றால் அதுவும் இல்லை. கடந்த திங்கட்கிழமை வடமராட்சியிலும் அதன் தொடுகைக் கடற்பரப்புக்களிலும் மட்டும் பல்லாயிரம் கிலோசூடை மீன்கள் பிடிபட்டிருக்கின்றன. ஆனால், அடிமாட்டு விலைக்குத்தான் அவை இடைத்தரகர்களால் கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றன. குளிர் கொள்கலனில் ஏற்பட்ட இடப்பற்றாக்குறையால் பல இடங்களில் மீனவர்களிடம் இருந்து 50 வீதமான (அவரவர் வலைகளில் சிக்கியவற்றுக்கு ஏற்ப இதன் அளவு மாறுபடும்) மீன்களே கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றன. மீனவர்களுக்கு மண்ணெண்ணெய்க்கு மானியம் வழங்கப்படவில்லை. இதனால், எரிபொருளுக்காகப் பெருமளவு தொகையைச் செலவிட்டு கடற்றொழிலுக்குச் சென்று நள்ளிரவில் குளிரோடும் காற்றோடும் சமராடி மீன்களுடன் திரும்பினால், அதன் இலாபத்தைப் புசிப்பவர்களாக இடைத்தரகர்கள்தான் அமைகின்றனர். இதைவிடக் கொடுமை யாதெனில், அதிகரித்த மீன்வருகையால் கூலர் வாகனங்களின் கொள்கலன்கள் நிரம்பியமையால் மறுநாள் மீன்கள் கொள்வனவு செய்யப்படாது என்று இடைத்தரகர்கள் அறிவித்திருக்கின்றனர். இதனால் மறுநாள் நூற்றுக்கணக்கான மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை.

இது யாருடைய தவறு? நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கவேண்டும் என்று மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொண்டிருக்கும் ரணில் அரசாங்கம், உண்மையில் அந்தக் கொள்கையை ஆத்மார்த்தமாகக் கொண்டிருக்கின்றதா? என்ற கேள்வியை எழுப்ப வேண்டியிருக்கின்றது. எரிபொருள் இல்லாமையாலும், காலநிலை மாற்றங்களாலும் கடந்த பல மாதங்களாக வருவாயை இழந்திருந்த மீனவர்கள் தமது பொருளாதாரத்தை மேம்படுத்தவேண்டிய இக்காலத்தில் கடலை வெறிக்கப் பார்த்தபடி கரையில் நிற்கின்றனர். அரசாங்கம் இவர்களுக்கு உதவித்திட்டங்களை வழங்காவிட்டாலும் பரவாயில்லை, நிரந்தரச் சந்தை வாய்ப்பொன்றை ஏற்படுத்திக் கொடுத்திருந்தாலே இன்று அவர்களின் பண இருப்பு மேம்பட்டிருக்குமல்லவா? தற்சார்புப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வழிகளில் கோட்டை விட்டுவிட்டு, டொலருக்காக யாசகம் செய்வதெல்லாம் கொழும்பால் மட்டும்தான் முடியும்.

## நாளொரு நல்வார்த்தை

"இளைஞன் விதிகளை அறிந்திருப்பான், ஆனால் முதியவர் விதிவிலக்குகளை அறிந்திருப்பார்"

— ஒலிவர் வெண்டெல் ஹோல்ம்ஸ்




### சர்வதேச நாணய நிதியத்தின்

# அனைத்து நிபந்தனைகளையும் நடைமுறைப்படுத்த முடியாது!

### ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு



கொழும்பு, பெப். 17

சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்படவேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்ற போதிலும், அதன் சகல நிபந்தனைகளையும் நடைமுறைப்படுத்தமுடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகப் பொருளாதாரத்தில் இலங்கை அங்கத்துவம் வகிக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும். அவ்வாறு செய்தால் மாத்திரமே டொலர் வருமானத்தை அதிகரித்துக்கொள்ள முடியும். உலகில் ஒரு பங்காளியாகவே இலங்கையைக் கட்டியெழுப்ப முடியும். எமது இந்த வேலைத்திட்டங்கள் தொடர்பில் மக்களுடன் கலந்துரையாட எதிர்பார்க்கின்றோம். அரச நிறுவனங்களின் செலவுகளைக் கட்டுப்படுத்தல், இலங்கை விமானசேவை போன்றவற்றை தனியார் மயப்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு பரிந்துரைகளை எமது பொருளாதாரத் திட்டத்தில் உள்ளடக்கியுள்ளோம். அத்தோடு தனியார் நிறுவனங்களுக்கு முதலீட்டு வாய்ப்புக்கள் அதிகரிக்கவேண்டும். மேலும் மீள் புதுப்பிக்கத்தக்க மின்சக்தி துறையை மேம்படுத்துவதில் அவதானம் செலுத்தவேண்டும். மீள் புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மூலம் அதிகளவு டொலர் வருமானம் ஈட்டும் நாடுகளுக்கு சிறந்த உதாரணம் பூட்டான், நேபாளம் என்பனவாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் அதன் அனைத்து நிபந்தனைகளையும் அங்கீகரிக்கமுடியாது. சர்வதேச நாணய நிதியம் நாட்டின் அரசியல் நிலவரம் தொடர்பில் கவனத்தில் கொள்ளாது. ஆனால் உறுதியான அரசாங்கம் இருந்தால் தொடர்ந்தும் பயணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கமுடியும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட இணக்கப்பாடு என்ன என்பது தொடர்பில் இன்னும் எமக்குத் தெரியாது. அதனை அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும். நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தின் நிதி பற்றிய குழுவுக்கு மீண்டும் அதே உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டால், இது தொடர்பான நடவடிக்கைகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வோம்.

சர்வதேச நாணய நிதியம் பரிந்துரைத்துள்ள வரிக்கொள்கையை ஒருபோதும் எம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாது. அதற்கான மாற்று வேலைத்திட்டம் எம்மிடமுள்ளது. எமது இந்த பொருளாதார வேலைத்திட்டத்தை நாம் சர்வதேச நாணய நிதியத்திடமும் சமர்ப்பித்துள்ளோம். எமது வேலைத்திட்டங்களுடன் இணக்கப்பாடு எட்டப்பட்டால் தொடர்ந்தும் பயணிக்க முடியும் - என்றார். (ம)

நாளை

18.02.2023
சனிக்கிழமை
மாசி 06

சுபநேரம் : 03.32 - 05.02
ராகுகாலம் : 09.32 - 11.02

மஹா சிவராத்திரி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலநடுக்கப் பகுதியில் எங்கும் துர்நாற்றம் கட்டடங்களுக்குள் மெல்லிய அவலக்குரல்!

## இதுவரை 42,000 பேர் பலி

அங்கரா, பெப். 17

துருக்கி சிரிய எல்லையில் கடந்த 6ஆம் திகதி ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பல்லாயிரம் மக்கள் உயிரிழந்துள்ள நிலையில், அந்தப் பகுதியில் கடும் துர்நாற்றம் வீசுகின்றது என்றும் எங்கும் அவலக்குரல் கேட்கின்றது என்றும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள குழுவினர் தெரிவித்துள்ளனர்.





இந்த நிலநடுக்கங்களால் இதுவரை 42 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். பல்லாயிரம் சடலங்கள் அழுகிய நிலையில் மீட்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனால், சிரிய - துருக்கி எல்லையில் துர்நாற்றம் வீசுகின்றது என்றும் இது சுகாதாரச் சீர்கேடான நிலைமையைத் தோற்றுவித்துள்ளது என்றும் மீட்புக் குழுவினர் அறிவித்துள்ளனர். மலைபோல் கட்டட இடிபாடுகள் சூழ்ந்திருக்கின்றன. கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து இன்னமும் அவலக்குரல்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றன என்றும் மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

துருக்கியில் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள சல்மான் அல்தீன் என்பவர், 'நான் அன்டாக்கியா பகுதியில் கடந்த ஒரு வாரமாக மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளேன். நான் இத்தனை மரணங்களையும் இவ்வளவு உடல்களையும் என் ஆயுளில் பார்த்ததில்லை. அர்மகடான் படத்தில் வரும் காட்சிகள்போல் இங்கே நிலைமை இருக்கிறது. இந்த நகரம் முழுவதுமே பிணநாற்றம் வீசுகிறது' என்று அழுகையுடன் தெரிவித்துள்ள காணொலி சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றது.

நிலநடுக்கத்தால் சுமார் 6 ஆயிரம் கட்டடங்கள் முற்றாக இடிந்து வீழ்ந்த நிலையில், அவற்றில் 75 வீதமான பகுதிகளே முழுமையாக மீட்கப்பட்டுள்ளன. இன்னும் 25 வீதமான பகுதிகள் மீட்கப்படவில்லை. இதனால், உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உயிரிழப்பு எண்ணிக்கை 50 ஆயிரம் தொடும் என்று ஐக்கிய நாடுகள் சபை முன்னதாக எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



## உலகின் பல நாடுகளில் சீனாவின் உளவு பலூன்

### அமெரிக்கா குற்றச்சாட்டு

வொஷிங்டன், பெப். 17

உலகின் பல நாடுகளில் சீனாவின் உளவு பலூன் பறந்துள்ளது என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

அமெரிக்காவின் மொன்டானா மாகாணத்தில் அணு ஆயுதத் தளத்துக்கு மேலே பறந்த இராட்சத பலூன் சுட்டு வீழ்த்தப்பட்டது. இது சீனாவின் உளவு பலூன் என்று அமெரிக்கா தெரிவித்தது. பின்னர் அமெரிக்க வான்பரப்பில் பறந்த மேலும் இரண்டு மர்மப் பொருள் சுட்டு வீழ்த்தப்பட்டது. அதேபோல் கனடாவிலும் பறந்த ஒரு மர்மப்பொருள் அமெரிக்க உதவியுடன் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதற்கிடையே இந்தியா உட்பட பல நாடுகளில் சீனாவின் உளவு பலூன் பறந்ததாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. (ம)

## விண்வெளிக்குச் செல்லும் சவூதியின் முதல் பெண்



ரியாத், பெப். 17

சவூதி அரேபியா முதல்முறையாக பெண் விண்வெளி வீராங்கனை ஒருவரை விண்வெளிக்கு அனுப்ப உள்ளது.

சவூதி அரேபியா அரசு கடந்த ஆண்டு விஷன் 2030 என்ற விண்வெளித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இதற்காக விண்வெளி வீரர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. விண்வெளி தொடர்பான ஆராய்ச்சிகளில் சவூதி அரேபியாவுக்கும், ஐக்கிய அமீரகத்துக்கு இடையே கடந்த சில ஆண்டுகளாகப் போட்டி தொடர்ந்து வருகிறது. மேலும், பெண்களுக்கு எதிரான அடக்குமுறையைக் கொண்ட நாடு சவூதி என்ற பழைய அடையாளத்தையும் அழிக்க சவூதி தொடர்ந்து முயன்று வருகிறது.

இந்த நிலையில், விண்வெளிக்கு முதல் முறையாக விண்வெளி வீராங்கனையை சவூதி அரேபியா அனுப்ப உள்ளது. இதனை சவூதி அரசு ஊடகம் உறுதி செய்துள்ளது. (ம)

## துருக்கி நிலநடுக்கம்

## 9 நாள்களுக்குப் பின்னர் நேற்று எட்டுப் பேர் மீட்பு

அங்கரா, பெப். 17

துருக்கியில் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து நேற்று எட்டுப் பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

துருக்கி, சிரியாவில் கடந்த 6ஆம் திகதி அதிகாலை ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் பலியானோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. சுமார் 25 வீதமான கட்டட இடிபாடுகள் இன்னமும் மீட்கப்படாத நிலையில் மீட்புப் பணிகள் தற்போது தொடர்ந்து வருகின்றன. இந்த நிலையில் கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து 8 பேர் நேற்று பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் நால்வர் சுய நினைவற்று இருந்தனர் என்றும் மருத்துவ உதவிகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன என்றும் மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 01 - 05 - 1946

உதிர்வு 10 - 02 - 2010

## அமரர் ருக்மணி நடராசா

**திதி: துவாதசி 17.02.2023**

உயிருக்குள் அடைகாத்து....
உதிரத்தை பாலாக்கி...
பாசத்தில் தாலாட்டி ....
பல இரவுகள்
தூக்கத்தை தொலைத்து....
நமக்காகவே என்றும் எங்களுடன்
வாழும் அன்புத்
தெய்வமே எங்கள் அம்மா!

**138A, சேர் பொன். இராமநாதன் வீதி,**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

**பிரிவால் துயருறும்**
**நடராசா (கணவர்)**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளை**

(CS 49123) (3/6)


நீங்கள் கடுமையான இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?

இன்றே பாவியுங்கள்.

சித்தாரா துளசி அசமோதகம் பாணி

ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த அற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும் சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு , அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.

யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.


Manufactured By:
SITHARA SIDDHAYURVEDA PHARMANCY.

சந்தைப்படுத்துவோர் :
சிவா நறுமணப் பூங்கா ®
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி. : 021 222 2567
(குறிப்பு : சத்திரச்சந்திக்கு அண்மையில்)

(CR 39207)(3/6)

உங்கள் நிலம் அறுதியாகபோகிறதா?
விரைவாக சொத்துக் கடனுக்கு அழையுங்கள்.
076-2488353


# மரண அறிவித்தல்



அன்ரன் **யோகநாதன் (ரஞ்சன்)** யோவான்பிள்ளை கடந்த (13.02.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புனித பத்திரிசியார் வீட்டில் இருந்து புனித மரியன்னை பேராலயத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டு, பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கக் கிரியைக்காக இன்று (17.02.2023) வெள்ளிக்கிழமை எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தோற்றம் 07.05.1957 மறைவு 13.02.2023

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 01 • 04 • 1953

இறப்பு 18 • 01 • 2023

## அமரர் தர்மலிங்கம் சிவகுமாரன்

(இராசு வாத்தியார், இளைப்பாறிய ஆசிரியர்)

தன்மானம் தலைநிமிர்வு தாராள மனம் மிகுந்து
திமிரான சிரிப்புடனே தீர்க்கமான முடிவு கொண்டு துன்பம் கண்டு துவளாது தூண்
போன்று எமைக் காத்து தெம்புடனே தெளிவும் ஊட்டி தேற்றி தேற்றி எமை
வளர்த்து தைரியமாய் நாம் மிளிர தவிக்க விட்டு சென்றிட்டீரே
தொண்ணூறு வரை நீர் இருந்து தோள் கொடுத்து எம்மைக் காப்பரென
தைரியமாய் நாம் வாழ தேம்பி அழ வைத்துவிட்டீரே ஆண்டவன் கழல்
அடைந்து ஆண்டராய் எமை காப்பீரென அனுதினமும் உம்மை
நினைத்து அனு அணுவாய் துடிக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**"குமரஸ்தான்"**
**செட்டிவளவு, இணுவில் மேற்கு,**
**இணுவில்.**

(cs.23395) (2.6)

**குடும்பத்தினர்**

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்



கடந்த 19.01.2023 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வமாகிய

## அமரர் சண்முகம் பத்மநாதன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (18.02.2023) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் மரணச்செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**காளிகோவிலடி, கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.**

(CS/23381)4.6

**குடும்பத்தினர்.**
**077 724 0942**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய மீனவர்களின்

# அத்துமீறிய மீன்பிடியை உடன் கட்டுப்படுத்துக!

### யாழ். இந்தியத் தூதரகத்தில் மனு

யாழ்ப்பாணம், பெப். 17

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையை உடன் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி, காரைநகர் பிரதேசசபைத் தவிசாளர் க.பாலச்சந்திரனால் யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தில் முறைப்பாடொன்று கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவைக் கையளித்த பின்னர் தவிசாளர் க.பாலச்சந்திரன் தெரிவித்ததாவது:

கடந்த இரு வாரங்களாக காரைநகர் கற்கோவளம் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய இழுவைமடிப்படகுகளின் மீன்பிடி காரணமாக பல மீனவர்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். வடக்குக் கடற்பரப்பில் அதிகளவான மீன்களைப் பிடிக்கக்கூடிய காலமாக இந்தக் காலம் இருக்கின்றது. இந்த நிலையில், இவ்வாறான அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் எமது பிரதேச மீனவர்களை வெகுவாகப் பாதிக்கின்றன. இதுகுறித்து நான் இந்தியத் தூதரக அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியிருந்தேன். அதன்போது தாம் நேரடியாகக் காரைநகர் பிரதேசத்துக்குப் பயணம் செய்து இது தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக தூதரக அதிகாரிகள் எனக்கு வாக்குறுதியளித்துள்ளனர் - என்றார். (ம-14-125)

## விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, பெப். 17

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த நெல் அறுவடை இயந்திரத்துடன் மோதியதில் அதில் பயணித்த இருவர் காயமடைந்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை நள்ளிரவு மிருசுவில் ஏ-9 வீதியில் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் நிகழ்வொன்றுக்குச் சென்று பளைக்குத் திரும்பிய வேளையில் இந்த விபத்து இடம்பெற்றதெனத் தெரிவிக்கப்பட்டது. விபத்தில் காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். (ம-14-9)




குடும்ப வன்முறை மற்றும் அதிலிருந்து மீள உதவுதல், சட்ட ஆலோசனைகள் வழங்கும் முகமாக உளவளத் துணை நிலையம் யாழ்ப்பாணம் பெண்கள் சிறுவர் மகளிர் பிரிவில் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வாரத்தில் ஒருநாள் இந்த நிலையத்தின் ஊடாக மக்கள் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-23)


## தவறவிடப்பட்டுள்ளது

கடந்த (05.01.2023) புதன்கிழமை மானிப்பாய்க்கும் ஆனைக்கோட்டைக்கும் இடைப்பட்ட பகுதியில் 2 கடவுச்சீட்டு (Pass Port) தவறவிடப்பட்டுள்ளது. (வன்னிய சிங்கம் சறோயினிதேவி. வைத்திலிங்கம் வன்னிய சிங்கம்) கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். தகந்த சன்மானம் வழங்கப்படும்.

077 351 8943, 077 660 7329


### வீணா கான அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், பெப். 17

மாவை ப்ருந்தகானலயா அதிபர் வாத்தியவாணி திருமதி கோகிலத்வனி விஜயராகவனின் மாணவி மைத்ரேயி பிரபாகரனின் வீணா கான அரங்கேற்றம் மஹாசிவராத்திரி தினமான நாளை சனிக்கிழமை இரவு 7 மணிக்கு கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர தேவஸ்தானத்தில் சிவாகமபானு சிவஸ்ரீ ந.குமாரசாமிக்குருக்கள் தலைமையில், இராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரகுருக்களின் ஆசிர்வாதத்துடனும், ஆலய உள்மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இவர், கீரிமலை தேவஸ்தான ஆதீனகர்த்தா இராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரகுருக்களின் பூட்டியும், மாவை து.குமாரசாமி சர்மா கெங்காதேவி, வாமதேவ சர்மா இராஜராஜேஸ்வரியின் பேத்தியுமாவார்.

கொழும்பு வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலய மாணவியான இவரது நிகழ்வைத்தொடர்ந்து ப்ருந்த கானலயா இசைக்குழு மாணவர்களின் இசை நிகழ்ச்சியும் நடைபெறும். (ஒ-5)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 07 . 07 . 1942



இறப்பு 18 . 01 . 2023

திருமதி

**செல்வராஜேஸ்வரி பொன்னுசாமி**

**B.A.Dip.in Edu.**

(ஓய்வுபெற்ற உப அதிபர் - யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி )

கடந்த 18.01.2023 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் பிரிவுச் செய்தியறிந்து துயரில் பங்கு கொண்ட உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு. நாளை (18.02.2023) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் "இலங்கை வேந்தன்" (நீராவியடி) மண்டபத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓட்டுமடம், யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.



## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 07.06.1943

உதிர்வு 10.03.2021

திதி:17.02.2023

திரியோதசி

அமரர்

**நாகநாதர் சிவஞானம்**

கண்ணின் மணிபோல் எமைக் காத்தீர் அப்பா
காலையில் மலர்ந்த பூ மாலையில் வாடியது போல்
காலங்கள் இரண்டு ஓடியதே........ஏ
இன்று போல் உள்ளது எமைவிட்டுப்
பிரிந்து - ஆனால்........?
காலன் வென்று விட்டானே
அன்னையும், தந்தையுமாய் அரவணைத்த
தெய்வமே உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைஞ்சுகின்றோம்.

76/60, இராமநாதன் வீதி,
கலட்டி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதியின் பாதுகாவலர் தவறானமுடிவெடுத்து சாவு!

சாவகச்சேரி, பெப். 17
நீதிபதி ஒருவரின் பாதுகாவலர் தவறானமுடிவெடுத்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் சாவகச்சேரி - கல்வயலில் நேற்று இடம்பெற்றது.
முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் பாதுகாவலராகப் பணியாற்றும் மேற்படி நபர், விடுமுறையில் வீட்டுக்கு வந்திருந்தார். இந்தநிலையில், வெளியே சென்றிருந்த தாயார் வீட்டுக்கு வந்தபோது தவறான முடிவெடுத்து உயிரிழந்த நிலையில் காணப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-ஒ-9)

# மயங்கிய முதியவர் சாவு!

சாவகச்சேரி, பெப். 17
துவிச்சக்கர வண்டியில் நேற்றுமுன்தினம் மதியம் சந்தைக்குச் சென்ற முதியவர் ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.
சாவகச்சேரி - கச்சாய் வீதி முருகமூர்த்தி கோவிலடியைச் சேர்ந்த மார்க்கண்டு தெய்வேந்திரன் (வயது -72) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
வீதியில் மயங்கி வீழ்ந்த இவரை சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோதும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ஒ-9)

## ஆணைக்குழு...

நிதியமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில், அவர்கள் நேற்று வரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.
தபால்மூல வாக்கெடுப்புக்குத் தேவையான வாக்குச் சீட்டு அச்சிடல் பணிகள் நிதி நெருக்கடியால் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில் தேர்தல் நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் கலந்துரையாட தேர்தல்கள் ஆணைக்குழு திறைசேரியின் செயலர் மஹிந்த சிறிவர்த்தன உட்பட நிதியமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தது. ஆனாலும் அவர்கள் கலந்துரையாடலில் பங்கேற்கவில்லை. (அ-ஒ-இ)

## கலாசார...

வழங்க வேண்டும் எனவும், 'யாழ்ப்பாண பண்பாட்டு நடுவம்' எனப் பெயர் சூட்ட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
இதேவேளை- யாழ்ப்பாண கலாசார நிலையத்தை 'சரஸ்வதி மஹால்' எனப் பெயர்சூட்டவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரியிருந்த நிலையில், யாழ். மாநகரசபை இவ்வாறானதொரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.
யாழ்ப்பாண மாநகரசபையின் மாதாந்த அமர்வு நேற்றுக் காலை மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் இடம்பெற்றது.
இதன்போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மாநகரசபை உறுப்பினர் சொலமன் சிறில் யாழ்ப்பாண கலாசார நிலையத்தை மாநகர சபைக்கு வழங்க வேண்டும் எனும் பிரேரணையை சபையில் முன்வைத்தார். சபையில் பிரசன்னமாகியிருந்த அனைத்து உறுப்பினர்களும் சம்மதம் தெரிவிக்க பிரேரனை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
ஒட்டுமொத்தத் தமிழர்களும் கரிநாளாக பிரகடனப்படுத்திய நாளில் இந்தக் கட்டடத்தை கையளிக்கும் நிகழ்வை நடத்தி எங்களுடைய முகத்தில் கரியைப் பூசியுள்ளதாக அகில இலங்கை தமிழ் காங்கிரசின் மாநகரசபை உறுப்பினர் வை. கிருபாகரன் குற்றம்சாட்டினார். அத்தோடு இந்தக் கட்டடத்தைக் கையளிக்கும் நிகழ்வில் யாழ். மாநகர முதல்வருக்கு சரியான முறையில் கௌரவம் வழங்கப்படாதது தனக்கும் சபைக்கும் மன வேதனையை ஏற்படுத்தியதாக வை. கிருபாகரன் தெரிவித்தார்.
இதேவேளை- இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியில் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கலாசார நிலையம் மாநகரசபையைத் தவிர்த்து வேறு யாரிடமும் வழங்கப்படமாட்டாது என இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளதாக மாநகர முதல்வர் இ. ஆர்னோல்ட் சபையில் தெரிவித்தார். (அ-ஒ-125)

## 'கிடுகிடு'...

புகைப்பட பிரதி ஒன்றின் விலை 5 ரூபாவால் அதிகரிக்க அகில இலங்கை தொடர்பாடல் உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. ஏ-4 அளவு நகல் பிரதி 15 ரூபாவிலிருந்து 20 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அடையாள அட்டையின் நகல் பிரதி 10 ரூபாவிலிருந்து 15 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அச்சுப் பிரதிகள் வழங்குவதற்கான கட்டணமும் கறுப்பு வெள்ளைப் பிரதி 5 ரூபாவாலும் வர்ண்ணப் பிரதியொன்றுக்கு 10 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.
மேலும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து ஆடைகளின் விலையையும் 20 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டியுள்ளதாக ஆடை உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
இதேவேளை- நேற்று நள்ளிரவு முதல் உணவகங்களில் விற்பனை செய்யப்படும் அனைத்து பேக்கரி பொருள்கள் மற்றும் பிற நுகர்பொருள்களின் விலைகள் 10 சதவீதம் அதிகரிக்கப்படும் என உணவக உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. உணவகங்களில் விற்கப்படும் ரைஸ், கொத்து மற்றும் இதர நுகர்பொருள்களின் விலையை நள்ளிரவு முதல் 10 சதவீதம் உயர்த்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)


## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 03 . 1993



மறைவு 12 . 02 . 2023

**பாலசுப்பிரமணியம் சயந்தன்**

குரும்பசிட்டி கிழக்கு தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் சயந்தன் கடந்த (12.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து நாகம்மா தம்பதியரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம் இரத்தினம் ஆகியோரின் அன்புப் பேரனும், பாலசுப்பிரமணியம் - மனோன்மணி தம்பதியரின் அன்புப் புதல்வனும், வாசுகி, சர்மிலன், சாருஜன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ருக்ஷிகாவின் அன்புக் கணவரும், மாவிட்டபுரத்தைச் சேர்ந்த தெய்வேந்திரம் - ரெஜினா தம்பதியரின் அன்பு மருமகனும், இராதன், அபிராஜினி, டேனியல் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அபிர்ணா, அஷ்வின், அமீரா ஆகியோரின் அன்பு மாமனும், அபிசாவின் சித்தப்பாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2023) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 1.30 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் குப்பிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பலாலி வீதி, குரும்பசிட்டி கிழக்கு.
தொ.இல: 076 210 4289
077 418 8061

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 23502) 1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 - 10 - 1948



மறைவு 16 - 02 - 2023

**திருமதி பாக்கியநாதர் பாக்கியம்**
**(பாலபண்டிதர்)**

தொல்புரம் மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திருமதி பாக்கியம் பாக்கியநாதர் அவர்கள் நேற்று (16.02.2023) வியாழக்கிழமை சிவபதம் எய்தியுள்ளார்.
அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை சின்னம்மாவின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற பூலோகராசா செல்லம்மாவின் மருமகளும், திரு. பாக்கியநாதர் அவர்களின் பாசமிகு மனைவியும், திரு. பாஸ்கரன், திரு. பகிரதன் மற்றும் பாமினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், மஞ்சுளா, சுதாகரன் ஆகியோரின் அன்புமிகு மாமியாரும், தர்சிகன், பத்மஜன், பத்மஜா, கோகுலன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், அமரர்களான இராசாத்தி, முருகையா மற்றும் வேலையா, அன்னமுத்து ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அமரர்களான மாசிலாமணி, சிற்றம்பலம் மற்றும் அருந்ததி, அரியசோதி, தனலக்சுமிஅம்பாள்(லாலா), நேசராணி, செல்வராணி, தேவராணி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2023) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாற்று இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**வேலுப்பிள்ளை இரத்தினம்**

வேலணை 1ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இரத்தினம் அவர்கள் நேற்று (16.02.2023) வியாழக் கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், சிவதேவியின் கணவரும், திவாகரன், மயூரன், நிவாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கணபதிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, நாவேந்தன், பூபதி மற்றும் திலகமலர், யோகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

'வேல்பதி'
1ம் வட்டாரம், வேலணை.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 23504) 1-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவராத்திரி வழிபாடுகள்

**திருக்கேதீச்சரம்**

திருக்கேதீச்சரப் பெருமானின் சிவராத்திரி உற்சவம் நாளை சனிக்கிழமை காலை 5 மணிக்கு திருவனந்தல் பூசையுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து முதலாம் சாமப்பூசை அன்றையதினம் இரவு 8 மணிக்கும் இரண்டாம் சாமப் பூசை இரவு 10.30 மணிக்கும் மூன்றாம் சாம இலிங்கோற்பவ பூசை நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவு 12.15 மணிக்கும் நான்காம் சாமப் பூசை பின்னிரவு 3 மணிக்கும் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று சுவாமி பாலாவி தீர்த்தக்கரைக்கு எழுந்தருவார்.

சிவராத்திரியையொட்டி ஆலய வெளிவீதியில் அமைக்கப்படும் பிரமாண்ட அலங்கார மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. இதில் தமிழக மற்றும் இலங்கைக் கலைஞர்களின் ஆன்மீக உரைகள் மற்றும் பண்ணிசைக் கச்சேரி முதலியன இடம்பெறவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

⅄ ⅄ ⅄

**இலுப்பையடி வீரகத்தி விநாயகர்**

சிவராத்திரியை முன்னிட்டு கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெற்று தொடர்ந்து மகேசுவரர் பூசை இடம்பெறவுள்ளது. தொடர்ந்து மாலை 5 மணிக்கு அபிஷேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளன என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

⅄ ⅄ ⅄

**கொழும்புத்துறை விநாயகர்**

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் சிவராத்திரி தினமான நாளை சனிக்கிழமை மாாலை 6 மணிக்கு சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெற்று, தொடர்ந்து நான்கு சாமப் பூசைகள் இடம்பெறவுள்ளன என ஆலய பரிபாலன சபையினர் அறிவிவித்துள்ளனர்.

⅄ ⅄ ⅄

**கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம்**

மகாசிவராத்திரி திருநாளை முன்னிட்டு வட்டுக் கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு பூசை வழிபாடுகள் இடம்பெற்று தொடர்ந்து நான்கு சாம அபிஷேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளன. மறுநாள் அதிகாலை 4 மணிக்கு திருவூஞ்சல் உற்சவத்தைத் தொடர்ந்து எம்பெருமான் ஆலய பித்தர்கேணியில் எழுந்தருளி தீர்த்தோற்சவம் இடம்பெறும். அன்றையதினம் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களின் வில்லிசைக் கச்சேரி, மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ச-14,66,125,26)

### நிலுவைகளைச் செலுத்தாவிடின்

# வர்த்தகக் கண்காட்சிக்கு இனி அனுமதியில்லை

### யாழ். மாநகரசபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப். 17

மார்ச் மாதம் 3ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ள சர்வதேச வர்த்தகக் கண்காட்சியின் ஏற்பாட்டாளர்கள் யாழ். மாநகரசபைக்கு வழங்கவேண்டியுள்ள நிலுவையைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை நடத்த அனுமதி வழங்கப்படமாட்டாது என்று யாழ். மாநகரசபையில் தீர்மா னம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம், முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றது. கூட்டத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள சர்வதேச வர்த்தகக் கண்காட்சிக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2019 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகளுக்கான வரி மற்றும் இதர கட்டணமாக சுமார் 39 லட்சம் ரூபா செலுத்தப்படாமல் நிலுவையிலுள்ள நிலையில், 2023 ஆம் ஆண்டு கண்காட்சியை நடத்துவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நிலுவையைச் செலுத்தாமல் கண்காட்சிக்கு அனுமதி வழங்குவதில்லை என்றும், மாநகரசபையால் வழங்கப்படும் சுகாதார சேவைகள் உட்பட நலச் சேவைகள் எதையும் வழங்குவதில்லை எனவும் சபையில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. (ம-14,20)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆசிரிய மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா, நேற்றுமுன்தினம் புதன்கிழமை கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது கலாசாலை முகாமைத்துவ குழுவினர் மாணவத் தலைவர்களுக்கான சின்னங்களை அணிவித்தனர். (ம-14)



மஹா சிவராத்திரியை முன்னிட்டு அகில இலங்கை சைவ மகா சபையின் ஏற்பாட்டில், கீரிமலை குழந்தைவேல் சுவாமிகள் அறப்பணி மைய அரங்கில் குருதிக் கொடைமுகாம் நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (ம-14,125)



## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், பெப். 17

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீசிவ மஹாகாளி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை சப்பரத் திருவிழாவும், 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 6ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்றையதினம் இரவு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது என்று ஆலய அறங்காவலர்சபை அறிவித்துள்ளது. (ம-14)

# பாடப்புத்தகங்கள் மார்ச் விநியோகம்

### கல்வியமைச்சர் நம்பிக்கை

கொழும்பு, பெப். 17

2023 ஆம் கல்வியாண்டுக்குரிய பாடப்புத்தகங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 27 ஆம் திகதிக்குள் விநியோகிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஹோமாகமவில் உள்ள கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாடநூல்களை வழங்கும் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- வருடாந்தம் பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு 4.5 பில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது. ஆனால், இந்த வருடம் பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு 16 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இந்த வருடம் ஆரம்ப வகுப்பு மற்றும் 6 முதல் 11 வரையிலான வகுப்புகளுக்குரிய பாடப்புத்தகங்களை பகிர்ந்தளிக்க முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது. அச்சிடுவதற்குத் தேவையான மூலப்பொருள்கள் இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையால் 45 வீதமான பாடப் புத்தகங்கள் அரச அச்சகத்திலும், 55 வீதமான பாடப்புத்தகங்கள் தனியார் அச்சகங்களிலும் அச்சிடப்பட்டுள்ளன - என்றார். (ச-இ)

## கிராஞ்சி -வலைப்பாடு நீர் விநியோகம் ஆரம்பம்

கிளிநொச்சி, பெப். 17

பூநகரி பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட கிராஞ்சி - வலைப்பாடு நீர் விநியோகத் திட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நீர்வழங்கல் மற்றும் மலையக உட்கட்டமைப்பு அமைச்சின் நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டமாக 858 பயனாளிகள் பயனடையும் வகையில், உலக வங்கியின் 228.78 மில்லியன் ரூபா செலவில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச்செயலர் க.ஸ்ரீமோகனன், பூநகரி பிரதேசசெயலர் ரி. அகிலன், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மாவட்ட பொறியியலாளர் எஸ்.சாரங்கன், நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் திட்ட முகாமையாளர் யோ.தயாபரன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ம-14,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிடைக்கின்ற...

இலங்கைக்கு வந்து சென்ற இந்திய வெளிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பில், தற்போது மேசையில் 13 ஆவது திருத்தமே இருக்கின்றது. அதனையே நடைமுறைப்படுத்தாத அரசாங்கம் எப்படி நீங்கள் அதற்கு அப்பால் கோருவதை நடைமுறைப்படுத்தும்? முதலில் இருப்பதைப் பெற்றுக்கொண்டு அதற்குமேல் பெறுவதற்கு முயற்சியுங்கள் என்று குறிப்பிட்டிருந்தார். அதேபாணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பதிலளித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய கொள்கைவிளக்கவுரையில் ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு என்ற கருத்தை மீண்டும் முன்வைத்திருந்தார். தமிழ்த் தரப்புக்கள் அதனை நிராகரித்திருந்தன. இது தொடர்பில் ஜனாதிபதியிடம் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

'நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். சொல்லாடல்களை வைத்து கருத்து மோதல்கள் வேண்டாம். அதேவேளை ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு என்று நான் கூறியது உண்மை. அந்த நிலைப்பாட்டிலேயே உறுதியாக இருக்கின்றேன். இந்த நிலையில் சொல்லாடல்களை வைத்து கருத்து மோதல்கள் வேண்டாம். கிடைக்கின்ற அதிகாரங்களை முதலில் பெற்றுக்கொள்ளுங்கள். இதைவிடுத்து சமஷ்டி என்று முட்டி மோதுவதால் அது வடக்குக்கும் தெற்குக்கும் இடையில் இனரீதியில் விரிசல்களை மேலும் அதிகரிக்கவே செய்யும். இதை சம்பந்தப்பட்ட தமிழ் அரசியல் தலைவர்கள் கவனத்தில் கொள்வார்கள்' - என்றார். (அ-ஒ-5-22)

## உண்மை...

கள் ஆணைக்குழு வழங்குவதற்கு ஏதுவாக, பாதிக்கப்பட்ட மற்றும் சம்பந்தப்பட்ட தரப்புகளோடு இன்று கலந்தாலோசனை செய்யவுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரும் ஓய்வுபெற்ற நீதியரசர் ரோஹினி மாரசிங்க தலைமையிலான ஆணைக்குழுவின் உயர் மட்டக் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்துள்ளனர். ஆணையாளர், செயலர், விசாரணைப் பணிப்பாளர், சட்ட அலுவலர்கள் அடங்கிய குழுவினர் வருகை தந்து கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர். இதன்போது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜும் பங்கேற்றிருந்தார்.

சமயத் தலைவர்களுடனும் இந்தக் குழுவினர் நேற்றுக் கலந்தாலோசனை செய்திருந்தனர்.

யாழ். மாவட்டத்தில் பெரிதாகப் பேசப்படுகின்ற உயிர்கொல்லி போதைப் பாவனை தொடர்பாக ஆராயப்பட்டது. உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையாளர்களுக்கு தன்னார்வ ரீதியில் சமய நிறுவனங்கள் புனர்வாழ்வு அளித்தல், அதற்கான பொறிமுறைகளை உருவாக்கல் தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது. அதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு எவ்வாறான உதவிகளைச் செய்ய முடியும்? என்றும் கலந்தாலோசனை செய்திருந்தனர்.

அதன்பின்னர் வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற சகல பொலிஸ் மா அதிபர்களுடனும் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. யாழ்ப்பாணத்தில், குறிப்பாக வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பாகவும், பொலிஸாருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பாகவும் பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளன. (அ-ஒ-5)

## தாயக...

டக்ளஸ் தேவானந்தா மாபெரும் துரோகத்தைச் செய்கிறார். டக்ளஸின் கருத்துக்கு அனைவரும் ஒன்றிணைந்து கண்டனம் வெளியிடவேண்டுமென்று தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் நா.இன்பநாயகம் கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர்களை எமது கடற்பிரதேசத்தில் தொழில்நடவடிக்கையில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஊடகங்கள் ஊடாக அறிந்தோம். இந்த முடிவை டக்ளஸ் தேவானந்தா எடுத்ததன் ஊடாக எங்கள் வாழ்வியலுக்கு முடிவுகட்டுகிறார். டக்ளஸ் தேவானந்தாவின் இந்த நிலைப்பாட்டை அனைத்து மீனவ மக்களும் கருத்துவேறுபாடுகளைக் களைந்து ஒருமித்து எதிர்க்கவேண்டும். இதனால் எழப்போகும் மிகப்பெரிய பிரச்சினையை நாம் தடுத்து நிறுத்தவேண்டும்.

இந்திய அரசு, இலங்கைக்கு தொடர்ச்சியாக நிதி வழங்கி வருகின்றது என்பதற்காக எங்கள் வளங்களை, மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வகையில் முடிவுகளை எடுக்கக்கூடாது.

மீனவர் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாட வாய்ப்பு ஏற்படுத்தித்தருமாறு பல தடவை கோரியபோதும் சாதகமான பதில்கள் வழங்கப்படவில்லை. ஆனால் இணை அமைச்சர், பா.ஜ.க. தமிழகத்தலைவர் அண்ணாமலை ஆகியோர் இங்கு வந்தபோதுகூட எம்மைச் சந்திக்காமல், அமைச்சர் டக்ளஸை சந்தித்து இப்படியொரு இணக்கப்பாடு எட்டப்பட்டமையை ஏற்கமுடியாது - என்றார். (அ-ஒ-125)

## அமைச்சர்...

செலுத்தியுள்ளதாகவும், அது தொடர்பான விரிவான விசாரணை நடத்தி அறிக்கைசமர்ப்பிக்குமாறு பொலிஸாரை கேட்டுள்ளதுடன், அவ்வாறான சம்பவம் நடைபெற்றிருக்குமானால் கண்டிக்கப்பட வேண்டியது எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மேலும், எந்தவொரு சூழலிலும் யாரும் வன்முறைகளைக் கையில் எடுப்பதை அனுமதிக்கமுடியாது எனவும், எமது தொப்புள்கொடி உறவுகள் பாதிக்கப்படாத வகையிலே இந்த விவகாரம் கையாளப்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை- இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடத்தப்பட்ட போராட்டத்தின் முடிவில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டது. இதன்போது கருத்து வெளியிட்ட அவர், அத்துமீறும் இந்தியப் படகுகளை இடிப்பதற்கு இரும்புப் படகுகளை வழங்குவதாகத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## பொதுப்பயன்பாட்டு...

முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

இதனால், கோட்டை நீதிவான் நீதிமன்றில் பெற்றுக்கொண்ட உத்தரவுக்கமைய, 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.

ஜனக ரத்நாயக்க தற்போது வெளிநாட்டுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளதுடன், அவர் நாடு திரும்பியதும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அலுவலகம் திறக்கப்படும் [illegible] இதேவேளை [illegible] மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராக தொடர்ச்சியாகக் குரல்கொடுத்து வருபவர் ஜனக ரத்நாயக்க என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## மனைவியைத்...

யில் பிக்கானால் தாக்கிக் கொலை செய்தேன் என்று அத்தியடிப் பகுதியில் பெண் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதான சந்தேகநபர் பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

கடந்த 12 ஆம் திகதி இரவு யாழ்ப்பாணம், அத்தியடியில் பெண் ஒருவர் தலையில் பிக்கானால் தாக்கிக் கொல்லப்பட்டிருந்தார். அந்த வீட்டுக்கு வேலைக்கு வரும் நபரே பெண்ணைக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்ட நிலையில், முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் 60 வயதுடையவர் என்றும் நாவற்குழிப் பகுதியில் மறைந்திருந்த சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டார் என்றும் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை நடந்த நாளன்று சந்தேகநபர் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் மற்றும் அவர் அணிந்திருந்த ஆடைகள், செருப்பு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. வீட்டிலிருந்த பெண்ணைத் தாக்கிக் கொலை செய்ததை சந்தேகநபர் ஒப்புக்கொண்டுள்ளார்.

'உயிரிழந்த பெண்ணின் குடும்பத்துடன் 10 ஆண்டுகளுக்கு மேலாக நட்புறவாகப் பழகி வருகின்றேன். அவர்களுக்குப் பல்வேறு உதவிகளைச் செய்துமிருக்கின்றேன். அண்மையில் ஒன்றரைக் கோடிரூபா பெறுமதியான காணி ஒன்றை உயிரிழந்த பெண்ணுடன் சேர்ந்து ஒருவருக்கு விற்றுக் கொடுத்து, அதற்குரிய தரகுப் பணத்தையும் வழங்கியிருந்தேன். சம்பவதினத்தன்று வீட்டில் கிடங்கு ஒன்று வெட்ட வேண்டியிருந்தது. நான் வழமையாக கூலிவேலை செய்வதில்லை. கிடங்கு வெட்டுமாறு கூறிய போது 'நான் கூலிவேலை செய்வது எனது மனைவிக்குப் பிடிக்காது, அவர்கள் வசதியாக உள்ளனர். நான் கூலி வேலை செய்வது அவர்களுக்குத் தெரிந்தால் பிரச்சினை ஏற்படும்' என்று கூறினேன். அப்போது அந்தப் பெண்மணி, எனது மனைவியைத் தரக்குறைவாகப் பேசினார். அதனால் ஆத்திரமடைந்த நான் அவரைத் தலையில் தாக்கினேன்' என்று தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், அவர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஒ-26)

## நாடளாவிய...

மற்றும் மின்சாரம் ஆகிய துறைகளின் ஒன்றிணைந்த சேவை சங்கத்தின் தலைவர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை மின்சாரசபை தனது நீண்ட கால நட்டத்தை ஈடு செய்வதற்காக இவ்வருடத்தில் மேலதிகமாக 288 பில்லியன் ரூபாவை திரட்டிக்கொள்ள உத்தேசித்துள்ளது. கடந்த ஐந்து மாத காலத்துக்குள் இருமுறை மின்கட்டணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. தற்போது 65 சதவீதத்தால் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பொரு[illegible]கடி தொடர்பில் அரசாங்[illegible]வுபூர்வமாகச் செயற்படுவதில்லை. தன்னிச்சையாகச் செயற்படும் அரசாங்கத்துக்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபடவேண்டும். தொழிற்சங்கங்களால் மாத்திரம் தனித்துச் செயற்பட முடியாது.

மின்கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து துறைமுகம், பெற்றோலியம் மற்றும் மின்சாரம் ஆகிய துறைகளை ஒன்றிணைந்து நாடளாவிய ரீதியில் ஹர்த்தால் நடவடிக்கையில் ஈடுபட எதிர்பார்த்துள்ளோம். தொழிற்சங்கப் போராட்டத்துக்கு நாட்டு மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார். (அ-ஒ-இ)

## இந்தியாவிலிருந்து...

நாளை நடைபெறவுள்ள சிவராத்திரி நிகழ்வில் பங்கேற்பதற்காக இவர்கள் வந்துள்ளனர்.

இவர்களை இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் உள்ளிட்டோர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்குச் சென்று வரவேற்றனர். (அ-ஒ-இ)

## பழமொழியால்...

லிருந்து வெளியேற்றப்பட்டதுடன் அவருக்கு ஒரு மாதகாலதடையும் விதிக்கப்பட்டது. அத்துடன் அவருக்குரிய இந்த மாதக் கொடுப்பனவும் நிறுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகரசபையின் அமர்வு நேற்றுக் காலை மாநகர மேயர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் வை.கிருபாகரன் கருத்துத் தெரிவித்தார். அதன்போது அவரது கட்சியைச் சேர்ந்த மற்றொரு உறுப்பினரான பா.பத்மமுரளி இங்குள்ள சிலர் 'வைக்கோல் பட்டறை நாய் போன்று' செயற்படுகின்றனர் எனத் தெரிவித்தார். இதனால் சபையில் அமளிதுமளி ஏற்பட்டது.

'அவ்வாறு தவறான வார்த்தை உவமையைக் கூறவேண்டாம். அதனை மீளப் பெற்று மன்னிப்புக் கோருங்கள்' என்று சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர். 'நான் பேச்சு வழக்கில் உள்ள சொல்லையே கூறினேன். தொப்பி அளவானவர்கள் அணியாலாம். மன்னிப்புக் கோரமாட்டேன் ' என்று உறுப்பினர் பத்மமுரளி தெரிவித்தார்.

இதேவேளை- முன்னைய மேயர் வி. மணிவண்ணனின் காலத்தில், நாய் மாதிரி குரைக்கக்கூடாது என்று ஒரு உறுப்பினர் கருத்துத் தெரிவித்தமைக்காக சபையின் அனுமதியுடன் அவ்வாறு கருத்து வெளியிட்ட உறுப்பினர், சபை நடவடிக்கைகளில் ஒரு மாதம் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டிருந்தது. எனவே ஒவ்வொரு உறுப்பினருக்கு ஒவ்வொரு வகையான நடவடிக்கையைப் பின்பற்றக் கூடாது என்று சபையிலுள்ள உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இதன்போது நாயை உவமையாக சுட்டிக்காட்டிய உறுப்பினர் பத்மமுரளி, சபையிலிருந்து தானே வெளியேறுவதாகக் குறிப்பிட்டார். 'அவரை ஒரு மாதம் இடைநிறுத்தும் முடிவை சபை ஏற்றுக்கொள்கின்றதா ?' என்று மேயர் கோரினார். அதற்கு சபையிலிருந்தவர்கள் ஏகமனதாக ஆதரவு தெரிவித்தனர்.

குறித்த உறுப்பினருக்கு இந்த மாதத்துக்கான கொடுப்பனவும் ரத்து செய்யப்படுகிறது எனவும், இந்த ஒரு மாதத்தில் சபையினுடைய செயற்பாடுகளுக்கு அவர் அனுமதிக்கப்படமாட்டார் எனவும் சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் உத்தரவாலேயே தேர்தல் பணிகள் நிறுத்தம்

## அநுரகுமார குற்றச்சாட்டு

**கொழும்பு, பெப். 17**

**உள்ளூராட்சித் தேர்தல் வாக்கெடுப்புக்கான வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகளை இடைநிறுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டதைத் தொடர்ந்தே அரச அச்சகத் திணைக்களம் தமது பணிகளை இடைநிறுத்தியுள்ளது. தேர்தல் பணிகளில் ஈடுபடவேண்டாம் என ஜனாதிபதி அரச அதிகாரிகளுக்கு அழுத்தம் வழங்குகின்றார் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார தெரிவித்தார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2022ஆம் ஆண்டு இடம்பெற வேண்டிய உள்ளூராட்சித் தேர்தலை முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் ஒருவருட காலத்துக்குப் பிற்போட்டார். எதிர்வரும் மார்ச் மாதம் உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், தம்மைத் தெரிவு செய்த 134 உறுப்பினர்களையும் மகிழ்விக்கும் வகையில் மீண்டும் தேர்தலைப் பிற்போடுவதற்காக ஜனாதிபதி ரணில் செயற்பட்டு வருகின்றார்.

தபால் மூல வாக்கெடுப்பு எதிர்வரும் 22, 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் இடம்பெறவுள்ள நிலையில் வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன. தேர்தலை நடத்துவதற்குத் தேவையான கடதாசி மற்றும் மை ஆகிய மூலப்பொருள்கள் அரச அச்சகத் திணைக்களத்திடம் உள்ள நிலையில், ''நிதி இல்லை. ஆகவே வாக்குச்சீட்டு அச்சிட முடியாது" என அச்சகத் திணைக் களத் தலைவர் கங்கா னி லியனகே குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்தவாரம் திறைசேரியின் செயலாளர், சட்டமா அதிபர், அரச அச்சகத் திணைக்களத் தலைவர் ஆகியோருடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளார். வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகளை இடைநிறுத்துமாறு ஜனாதிபதி அரச அச்சகத் திணைக்கள தலைவருக்கு உத்தரவிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்தே வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ரணில் விக்கிரசிங்கவின் ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகளுக்கு இடமளிப்பதா, இல்லையா என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும். தான் தேர்தலில் வெற்றி பெறுவதாக இருந்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலை நடத்துவார். ஆதலால், ஜனாதிபதி ரணில் பதவியில் இருக்கும் வரை எந்தத் தேர்தலையும் அவர் நடத்தப் போவதில்லை - என்றார். (ம)

# கட்டடக் கைத்தொழிலுக்கு புத்துயிரளிக்கப் புதிய குழு!

கொழும்பு, பெப். 17

தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு நாட்டின் கட்டடக் கைத்தொழில் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வுகளை வழங்க நிறைவேற்றுக் குழுவொன்று அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.**

**ஜனாதிபதி அலுவலகம், நிதியமைச்சு, நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை அபிவிருத்தி நிர்வாக** நிறுவனம், நீர்ப்பாசனத் திணைக்களம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் தனியார்துறை பங்குதாரர்களை உள்ளடக்கியதாக இந்தக்குழு அமைக்கப்பட வேண்டும் என முன்மொழியப்பட்டது. (ச-இ)


**கார்/வான் குத்தகைக்குத் தேவை**

தகுந்த பெறுமானம் வழங்கப்படும்.

**T.P: 077 4891 279**

**காலை நேர பேருந்து சேவை**

யாழில் இருந்து கொழும்பிற்கு அதி சொகுசு பேருந்து சேவை தினமும் முற்பகல் 9.00 மணி புதிய பஸ் நிலையத்திலிருந்தும் கொழும்பு வெள்ளவத்தையிலிருந்து முற்பகல் 9.00 மணி எதிர்வரும் திங்கட்கிழமை (20.02.2023) Rathna Travels பேருந்து சேவை நடைபெறும் என்பதனை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். (CS 49134) (3/6)

நிர்வாகி : Rathna Travels
தொடர்புகளுக்கு : 077 825 0506
Hot line : 077 335 4555

**துப்புரவுப் பணியாளர் தேவை**

பலாலி வீதி, கோண்டாவிலில் உள்ள இராசமணி திருமண மண்டபத்துக்கு துப்புரவுப் பணியாளர் தேவை. (CS/23389) 4,6

**077 831 2852**

**TECHNO WORLD**
**தொழில்நுட்பக் கல்லூரி**
(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்)

**A/L தொழில்நுட்ப பிரிவு**

**செயன்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள்**

* உயிர்முறைமை தொழில்நுட்பம்
* பொறியியல் தொழில்நுட்பம்

மாவட்ட மற்றும் தேசிய ரீதியில் 5வது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழக தெரிவு

ஆரம்பம் 19.02.2023 ஞாயிற்றுக்கிழமை **காலை 9.00**

**தொடர்புகளுக்கு : 077 017 5346**

**மணப்பெண் தேவை**

01. சித்தங்கேணி - நல்லூர், இந்து கௌரவகுலம் (V), 1983, அனுசம், ICT Masters, MA, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 13283
02. புங்குடுதீவு, இந்து கௌரவகுலம் (V), 1979, விசாகம், CIMA, Business Administration, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 15039
03. வண்ணார்பண்ணை - சுதுமலை. இந்து கௌரவகுலம் (V), 1976, ரேவதி. MBBS, MRCP, FRCP, Doctor, UK Citizen Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண்- 33108
04. வேலணை. இந்து குருகுலம், 1976, பரணி, Software Engnineer, UK citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 27673
05. வல்வெட்டித்துறை. இந்து. குருகுலம், 1977, விசாகம், Hospitality Managment, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 18417
06. மானிப்பாய் - பளை, இந்து கௌரவகுலம் (V), 1979, கார்த்திகை, Graducte, Canada citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 28457
07. கோப்பாய். இந்து கௌரவகுலம் (V), 1984, சதயம், MBBS Doctor, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 32160
08. திருநெல்வேலி, இந்து கௌரவகுலம் (V), 1990, விசாகம், MBBS Doctor, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 32016
09. திருநெல்வேலி, இந்து, கௌரவகுலம் (V), 1983, ரோகினி, B.Sc (Hons) Computer Science, UK, citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. பதிவெண் - 31305

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer
Whatsapp - 077 803 8193
Phone - 077 539 3728


## மரண அறிவித்தல்

தோற்றம் 18 - 01 - 1948



மறைவு 16 - 02 - 2023

**சீவரத்தினம் தெய்வநாயகி**

கலைவாணி வீதி, தையிட்டி, காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் சுவாமியார் வீதி கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் தெய்வநாயகி நேற்று (16.02.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வன்னித்தம்பி சீவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை பொன்னம்மா அவர்களின் இளைய மகளும், காலஞ்சென்ற வன்னித்தம்பி சின்னத்தங்கம் அவர்களின் மருமகளும், காலஞ்சென்றவர்களான சதாசிவம், செல்வபூரணம், சரஸ்வதி, அன்னமுத்து, செல்வரட்ணம் மற்றும் செல்வராசா ஆகியோரின் இளைய சகோதரியும், சிறிப்பிரகாஷ்(உதவி தபால் அதிபர்-நுவரெலியா) அவர்களின் அன்பு தாயாரும், றெசாந்தி(அபிவிருத்தி உத்தியோகத்தர்.நல்லூர்) அவர்களின் மாமியாரும், சிறிரஞ்சன்(Canada), சிறிநிவாசன்(Londan), சிறிலஸ்மணன்(France) மற்றும் காலஞ்சென்றவர்களான சிறிதரன், சிறிபாஸ்கரன் ஆகியோரின் சிறிய தாயாரும், யோகமலர்(சுமதி), சுதர்சினி, ஸ்கந்தகுமாரி(குயின்) ஆகியயோரின் மாமியாரும், துசாளினி, சேயோன், நிலானி, மதுசாலினி, சீவகன், லதுசான், லித்விகா ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2023) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.51,சுவாமியார் வீதி**
**கொழும்புத்துறை.**

**தகவல்-குடும்பத்தினர்**
**077 780 6166**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.02.2023 இல் அச்சிட்டு வெளியீடப்பெற்றது.